கின்றன. 3 கூட்டுறவு வங்கிகள் மூலம் அத்தியாவசியப் பொருள் கள் விநியோகம் செய்யப்படுகிறது. வேளாண்மைப் பணிகளுக்கு விவசாயக் கடனும் கொடுக்கப்படுகிறது. ரூபாய் 57.3 இலட்ச செலவில் சாலைப் போக்கு வரத்து வசதிகள் செய்யப்படுகின்றன.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்வராயன் மலைப் பகுதியில் உள்ள நிலங்கள் எத்தனை ஏக்கர்? எத்தனை ஏக்கர் பயிரிடப்படுகிறது? அந்த நிலங்களை சிலர் ஆக்கிரமித்திருக்கிறார்கள். அப்படி ஆக்கிரமிப்புச் செய்த வர்களை வெளியேற்றுவதற்கு அரசு ஒரு சட்டம் இயற்றுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப்பகுதியிலே உள்ள நிலங்கள் எத்தனை ஏக்கர் என்று கணக்கிட தற்போது ரெவின்யூ துறை யினர் அளந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தகவல் வந்த வுடன் சொல்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: அங்கே கேமூ டேம், மல்லியப் பாடி வழியாக வெள்ளிமலையில் சாலை போடும் திட்டத்தை இந்த ஆண்டில் நிறைவேற்றித்தர முடியுமா? மற்றும் 1,000 ஏக்கரில் பழத் தோட்டத்தைச் சாகுபடி செய்யவேண்டும் என்ற ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் இப் போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அந்தச் சாலை போடுவது பற்றி கலந்து பேசப்பட்டு இப்போது தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது. பழத் தோட்டம் விஷயமாக அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கொட்டம்பட்டு அகதிகள் முகாம்.

*குறுகிய கால வினா எண் 34—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கொட்டம்பட்டு அகதிகள் முகாமி லிருந்து மைசூர் அரசு விவசாயப் பண்ணைக்கு அகதிகள் எவ ரேனும் அனுப்பப்பெற்றனரா?

(ஆ) ஆம் எனில், இப்போது அவர்கள் பணியில் உள்ளார் களா?

1979 மார்ச் 31]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) ஆம்.

(ஆ) மைசூர் மாநிலத்தில் உள்ள சிந்தனூர் விவசாயப் பண்ணைக்கு அனுப்பப்பட்ட 36 குடும்பங்களில், 16 குடும்பங்கள் மேற்படி பண்ணையில் தொடர்ந்து வேலை செய்து வருகிறார்கள். 20 குடும்பங்கள் தமிழ்நாட்டிற்குத் திரும்பி வந்து விட்டார்கள்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, மைசூருக்கு அனுப்பப்பட்ட 36 குடும்பங்களை அனுப்பியபோது அந்த அரசாங்கம் ஏதாவது உத்தரவாதம் தந்ததா, அதன் பேரில் தான் இந்த குடும்பங்கள் அனுப்பப்பட்டதா? இப்படி அனுப்பப்பட்ட குடும்பங்களில் 16 குடும்பங்கள் அங்கே தங்கிவிட்டு 20 குடும்பங்கள் திரும்பி வந்துவிட்டனர். இதற்குக் காரணம் என்ன? இவர்களுக்கு அங்கே வேலை கொடுக்கவில்லையா? அதோடு ஒரு நாளைக்கு 60 காசு மட்டுமே உணவுக்காக கொடுக்கப்பட்டதால், இது போதாத காரணத்தால் அவர்களாகவே திருட்டு ரயிலேறி இங்கு வந்து விட்டதாகவும், இங்கு அமைச்சர் அவர்களை சந்தித்ததாகவும் செய்தி இருக்கிறதே, அது உண்மையா? அப்படியென்றால் இனிமேல் அவர்களாகவே எங்காவது ஓடிப் போய் பிழைத்துக் கொள்ளவேண்டியதுதானா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தனூர் விவசாயத் திட்டத்தின்கீழ் குடியமர்த்துவதற்காக 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 8 குடும்பங்கள் மண்டபம் இடைத்தங்கல் முகாமிலிருந்தும், மற்றும் 28 குடும்பங்கள் திருச்சியிலுள்ள கொட்டப்பட்டு இடைத்தங்கல் முகாமலிருந்தும் அனுப்பப்பட்டனர். கண்டியில் உள்ள உதவி ஹை கமிஷனர் அலுவலகத்தில் உள்ள முதல் செயலாளர் மேற்கண்ட குடும்பங்களை முறையே அரசு பண்ணைக் கழகத்தின் திட்டத்தின்கீழும், தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் தொழில் திட்டத்தின்கீழும், குடியமர்த்துவதற்கு அனுப்பப்பட்டு, 1978ஆம் ஆண்டு ஜுலைத் திங்களில் இந்தியா வந்து சேர்ந்தனர். அவர்கள் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் குடியேறுவதற்கு மறுத்து விட்ட காரணத்தால் அவர்களது சம்மதத்தையும், மத்திய இயக்குநரின் ஒப்புதலையும் பெற்று அவர்களை கர்நாடக மாநிலத்திலுள்ள சிந்தனூர் விவசாயத் திட்டத்தின்கீழ் குடியமர்த்துவதற்கு அனுப்பப்பட்டார்கள்.

திருச்சி, கொட்டப்பட்டு முகாமிலிருந்து அனுப்பப்பட்ட 28 குடும்பங்களில் 10 குடும்பங்கள் சிந்தனூரில் தங்களுக்கு தங்குவதற்கும், வேலைக்கும் சரியான வசதி செய்து கொடுக்கவில்லை

என்ற காரணங்களை கூறியும் உடனே திரும்பி விட்டார்கள். அவ்வாறு திரும்பிய அந்த 10 குடும்பங்களை மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்று, திருச்சி, கொட்டப்பட்டு முகாமில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு பின்னர் அவர்களுக்கு தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி தொழில் திட்டத்தின்கீழ் மறுவாழ்வு அளிக்கப்பட்டது.

மேலும் 10 குடும்பங்கள் தங்களுக்கு விவசாயத்தில் முன் அனுபவம் எதுவும் இல்லை என்றும், சிந்தனூர் சீதோஷ்ண நிலை தங்களுக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்றும் மற்றும் அங்கு பேசப்படும் மொழி தங்களுக்கு புரியவில்லை என்றும் காரணங்களைக் கூறி 16—2—1979-ந் தேதி சிந்தனூரில் இருந்து அவர்களாகவே விவசாயப் பண்ணை நிர்வாகிகளின் அனுமதி பெறாமல் தன்னிச்சையாக தமிழ்நாட்டிற்குத் திரும்பி விட்டனர்.

தற்போது நடைமுறையில் உள்ள மத்திய அரசு விதிகளின்படி குறிப்பிட்ட ஒரு திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்படுபவர்களுக்கு அவர்கள் அந்த திட்டத்திலிருந்து தன்னிச்சையாக வெளியேறி விட்டால் மேற்கொண்டு எந்த திட்டத்தின்கீழும் மறுவாழ்வு உதவி பெறுவதற்கு தகுதியற்றவர்கள் ஆகிறார்கள்.

இங்கு அவர்கள் அனுப்பப்பட்ட நேரத்தில் தமிழ்நாட்டில் குடியமர்த்த வேண்டும் என்று எதிர்பார்த்தபோது, மைசூருக்கு அனுப்புவதற்கு சம்மதம் பெற்றுத்தான் அனுப்பப்பட்டனர். அத்துடன் மத்திய மறுவாழ்வு அமைச்சர் அவர்களுடைய ஒப்புதல் பெற்று அனுப்பப்பட்டது. இப்போது அவர்களாகவே தன்னிச்சையாக திரும்பியிருக்கிறார்கள். என்னையும் வந்து சந்தித்தார்கள். மீண்டும் அவர்களை அங்கே போகவேண்டும் என்று சொன்னோம், அப்படி அவர்கள் அங்கே போகவில்லை என்றால், மாநில அரசின் திட்டத்தின்கீழோ அல்லது மத்திய அரசின் திட்டத்தின்கீழோ உதவியை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில், அவர்களாகவே தங்கள் மறுவாழ்வுத் திட்டத்தைத் தேடிக் கொள்ள வேண்டிய நிலையில் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, இன்று காலையில் தேசீயக் கொடி அரைக் கம்பத்தில்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிந்த பின்னால் அதைப்பற்றி கேளுங்கள்.